# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூச] யாழ்ப்பாணம்:- நந்தன வருடம் மார்கழி மீ ௨௰ உ செவ்வாய்க்கிழமை (13 Jan. 1953) [இல - எக]


# செந் தமிழைச் செந் தமிழாகச் செய்திடல் வேண்டும்

## பிறமொழிச் சொல்லாட்சி இம் மொழிக்கு வீழ்ச்சி

தமிழ் வாழ்க, முத்தமிழ் முழங்குக என்னும் முழக்கங்களைச் சில ஆண்டுகளாக மூலைமுடுக்குகளில் யாங்கணும் கேட்கிறோம். தமிழ் வீழ்க என்று யாரும் சொல்வதில்லை. எந்த நாட்டிலும் எவனும் தன் தாய்மொழி வளர்ந்து சிறப்பெய்த வேண்டுமென்று எண்ணுவானே யன்றி அழியவேண்டுமென எண்ண மாட்டான். எனவே தமிழரின் விழிப்புணர்ச்சி ஓரளவு தெரிகிறது தமிழ் வளரும் என்ற நம்பிக்கையும் பிறக்கிறது.

### தமிழ் எப்படி வளரும்?

"எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளியுறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செந்தமிழால் செய்திடலும் வேண்டும்"

என்று 'தமிழ் வளர்ச்சி' என்ற தலைப்பிலே தந்திருக்கிறார். மற்றும்

'பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள்
தமிழ்மொழியில்பெயர்த்தல்
வேண்டும்'

என்று பாரதியார் அவர்கள் பாடினர்.

இந்த நாளில் முக்கியமாகச் செய்ய வேண்டுவது, மேல்நாட்டு விஞ்ஞான அறிவியல் நூல்களையும் தமிழில் ஆக்க வேண்டும். அங்ஙனம் தமிழாக்குங்கால் கலைச் சொற்களை அப்படியே கொள்வதா, தமிழில் மொழி பெயர்த்துக்கொள்வதா எனும் இரு வேறுபட்ட கருத்துக்கள் அறிஞரிடையே நிலவுகின்றன. தமிழ் வளர்ச்சியில் இம்முறை பெரும் பகுதியைச் சார்ந்ததேயாகும். இது நிற்க, புதுச்சொற்கள் ஆக்கம் தமிழ் வளர்ச்சிக்குத் துணையாகுமெனினும், தமிழில் வழங்கி வந்த சொற்களில் எவ்வளவோ வழக்கிழந்து மறைந்தன. அவற்றில் பெரும்பாலானவற்றை வழக்கிற்குக் கொண்டுவருதலும் தமிழ் வளர்ச்சியின்பாற்படுமெனவும் கொள்ளலாம். ஆனால், வழக்கிழந்த சொற்களை மீண்டும் வழக்குப் படுத்துவது, உயிரிழந்த உடலுக்கு உயிரளிப்பதுபோலும் என்று பலர் கருதுகின்றனர். வழக்கழியக் காரணம் அச்சொற்களினிடங்களை வேற்றுமொழிச் சொற்கள் பற்றிக்கொண்டன என்பதையும் காண்கிறோம். இங்ஙனம் தமிழ்மொழி இழந்த சொற்கள் பல. இப்பொழுது அவ் வேற்று மொழிச் சொற்களுக்கு நேரிய தமிழ்ச் சொற்கள் இல்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. இத்தச் சொற்களேயன்றி வட்டெளவில் இருக்கும் சொற்களும் உள்ளன. தமிழ் வளரவேண்டும். முத்தமிழ் முழங்கவேண்டும் எனும் ஆர்வமுடையோர் முயன்றால் முடியாததன்று. சில ஆண்டுகளாக, இத்துறையிலே தமிழ் ஒரு சிறிது வளர்ந்துள்ளது என்று கூறத்தான் வேண்டும்! அதாவது, வருஷம், வந்தனம், நமஸ்காரம், சபாநாயகர், ஜலம், உப அத்தியக்ஷகர், சர்வகலாசாலை, போன்ற பல சொற்கள் நீக்கப்பட்டு முறையே, ஆண்டு, நன்றி, வணக்கம், அவைத்தலைவர், சோறு, தண்ணீர், துணைத்தலைவர், பல்கலைக் கழகம் என்னும் சொற்கள் மக்களிடையே சிறப்பாக மாணவ உலகிலே வழங்கப்பட்டு வருகின்றன. சோறு, வணக்கம் போன்ற சொற்களைப் பயன்படுத்தத் தொடங்கியபோது ஏதோ ஒரு இகழ்ச்சியாகக் கருதியவரும் உண்டு. ஆனால் இப்பொழுது நமஸ்காரம் என்ற சொல் நீக்கப்பட்டு, பெரும்பாலும் வணக்கம் என்ற சொல்லே வழக்கில் நுழைந்துவிட்டது என்று கூறின் மிகையாகாது. இங்ஙனமே வழக்கற்ற சொற்களையும் வழக்குப் படுத்தலாம்.

தமிழில் சிலசொற்கள் வழக்கிழப்பதற்குக் காரணம் பல உள. அவற்றில் ஒன்று சிறு சிறு பொருள் வேறுபாடுகளைக் கொண்ட பல சொற்களினிடத்தில் ஒரே சொல்லைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் Way Path, Road, Route முதலிய சொற்கள் பெரும்பாலும் வழி என்ற பொருளில் இருக்

தாலும் ஒவ்வொன்றிற்கும் சிறிய வேறுபாடுகள் உண்டு. ஒரு சொல்லைக் கூறவேண்டிய இடத்தில் வேறு சொல்லைக் கூற முடியாது. கூறின் பொருந்த மிருக்காது. அதே போன்று தமிழிலும் உண்டு. ஆனால் இப்பொழுது பல சொற்களைப் பல இடங்களில் கூறவேண்டி யிருக்க

"மணி - வண்ணன்"

எல்லாச் சொற்களுக்கும் ஒரே சொல்லைக் கூறி மற்றச் சொற்களை மறந்து விடுகின்றனர். எடுத்துக்காட்டாக இரண்டு மூன்று சொற்களை எடுத்துக் கொள்வோம் அவை, கஷ்டம், விஷயம், அவசியம் ஆகியவை.

இம் மூன்று சொற்களும் வழக்கில் நுழைந்து கொண்டு பல தமிழ்ச் சொற்களை அகற்றிவிட்டன. இப்பொழுது இம் மூன்று சொற்களும் மக்களிடையே யன்றி தமிழ்ப் புலவரிடையேயும் பெரிதும் பேசப்பட்டு வருகின்றன. கஷ்டம் என்ற சொல்லை நீக்கிப் பேசமுடியாதோ என்று கேட்டால் அது ஒரு பெரிய கஷ்டமாகத்தானிருக்கிறது" என்று சொல்லும் அளவிற்கு வழக்கில் ஊன்றி நிற்கிறது அச்சொல். "கஷ்டம்" என்ற சொல் எவ்வெவ் வழிகளில் பயன் படுத்தப்படுகிறதெனப் பார்ப்போம் "மனவருத்தம்" என்றுகூறுமிடத்து 'மனக் கஷ்டம்" என்றும், 'இன்னல் நிறைந்த வாழ்க்கை' என்னுமிடத்து "கஷ்டமான வாழ்க்கை"என்றும், "இம்மலை ஏறுதற்குத் துன்பம்" என்னுமிடத்து 'இம் மலை ஏறுதற்குக் கஷ்டம்" என்றும் இப் பொருள் கடிப்பதற்குக் கடினமாயிருக்கிறது 'என்றவிடத்து" இப்பொருள் கடிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது என்றும், "இடுக்கண் வருங்கால் நகுக" என்னுமிடத்து "கஷ்டம் வரும்பொழுது சகித்துக் கொள்ள வேண்டும்" என்றும் மக்கள் பேசுவதைக் காண்கிறோம்.

மக்களின் மனப் பண்பு நாளுக்கு நாள் எளிய வழிகளையே நாடிச் செல்லுகிறது, உடலுழைப்பினை எவ்வளவுக் கெவ்வளவு குறைக்க வழி செய்ய முடியுமோ அவ் வழியினை ஆய்ந்து செல்லுகிறது. ஐந்து மைலானாலும் நடந்தே செல்லும் கிராம மக்களும் இன்று ஒரு மைல் செல்ல பஸ்சுக்காகக் காத்திருப்பதைப் பார்க்கிறோம்; என்றால், பட்டணத்து மக்களைப் பற்றிக் கூறவே வேண்டாம்! நூறு வியாதிகளைக் கண்டு ... ஒரு மருந்தைக் கண்டுபிடித்து அதற்குச் சகல

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# அவதரித்தோரா? அதிகாரம் பெற்றோரா?

## சைவக் கொள்கை எது?

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்தார்; திருஞான சம்பந்தர் அவதரித்தார்; அவதரித்தார் என்று பல சமய அறிவாளிகளும் பேசியும் எழுதியும்

"குமரன்"

வருகிறார்கள். இது தவறு போலத் தெரிகிறது. இத்தப் பிழைக்குக் காரணம் இராமாயணம் பாரதம் போன்ற இதிகாசங்கள் போலும்.

வைணவச் சமயப் பரம்பொருள் விஷ்ணு. இவருக்குப் பத்து அவதாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இராமரும் கிருஷ்ணரும் அவைகளிலிரண்டு. இங்கே அவதாரமென்பது பரம்பொருளாகிய விஷ்ணு இவ்வுலகத்திற் சிலயுக தருமங்களை நிறைவேற்றுவான் யோனி வாய்ப்பட்டு மாயையுடம்பெடுத்து வருவதாகும். தசரதர் குமாரனாகிய இராமரை வைணவர் கடவுளாக மதிப்பர். இப்படிப் பிறந்தாரென்ற அவர் மதிப்பில் ஒரு சிறிதுங் குறையார். ஆனாற் பிறந்தவர்.

சைவசமயக் கடவுளாகிய சிவபெருமான் பிறப்பிலி இறப்பிலி. யோனி வாய்ப்பட்டுப் பிறக்குமெவரும் கன்ம விதிக்குட்பட்டவர் என்பது சைவ சமய வுண்மைகளிலொன்று. எனவே கன்ம விதிக்குட்பட்டவர் கடவுளாகமாட்டார். ஆகையினால் சிவபெருமான் திருஞானசம்பந்த சுவாமிகளாகவோ, ஆறுமுகநாவலராகவோ அவதரித்தார் என்பது சைவசித்தாந்தமாகும்.

கடவுள் ஒருவர். ஆன்மாக்கள் பல. இந்த ஆன்மாக்கள் புண்ணிய வசத்தால் அதிகாரிகளாக வரலாம். பெரும் அதிகாரிகளாகவும் வரலாம், பிரமா, விஷ்ணு இந்திரன் முதலியோர் ஆன்மாக்களில அதிகாரம் பெற்றோர்! கடவுளல்லர்; எனவே சைவசமயத்தவர், அவதரித்தோரென்னாமல் அதிகாரம்பெற்றோரென்று சொல்லுதலே சரி. கடவுள் மூர்த்தங் கொள்வர். அது திருவருட்டிருமேனி. மாயையுடம்பல்ல: யோனியிற் பிறப்பதல்ல.

### என்னை யாளுடைப் பாதம் போற்றி

திருச்சிற்றம்பலம்.

இழித்தன னென்னை யானே யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி உம்பர்நாட் டெம்பி ரானே.

திருச்சிற்றம்பலம்.

அரசியல் அலை

### யாழ் நகரில்

# மா மாயமாய் மறைந்தான் மது அரக்கன்

## அடுத்த போருக்கு ஆயத்தஞ் செய்க

மாயையின் மகன் சூரன். ஞானசொரூபத்தோடு போர் புரிந்ததே அவனுக்குப் பெருமை கொடுத்தது. எனினும் இலேசான யுத்தம் ஆடினானல்லன். மாறி மாறி மாயாவேடம் பூண்டான். இருந்தும் ஈற்றில் இயற்கை ஒழுங்கின்படி அடிபணிந்தான்.

மது அரக்கனும் மாயையின் புதல்வன். அவனை அகற்றுதல் சுலபமான காரியமன்று. வல்லுவெட்டித்துறையில் மாயமாய் மறைந்தான். சங்கானையில் தடை செய்யப்பட்டான், ஆனால் யாழ்நகரில் மாமாயம செய்து விட்டான். போர் நின்றுவிடவில்லை. தொடர்ந்து நடைபெறு மாதலால் ஈற்றில் அவன் யாழ்நாட்டை விட்டேகவே வேண்டும்.

முன்னேற்றமுடையது தலைநகரம் என்று சொன்னவர்கள் வெட்கித் தலைகுனிந்தனர். மாட மாளிகைகள் கூடகோபுரங்கள் முன்னேற்றக் குறிகள் அல்ல. கல்விக் கழகம் பெருங் கட்டடங்கள் முன்னேற்றச் சாதனங்கள் அல்ல. உண்மை அறிவே முன்னேற்றத்துக்குத் தூண்டுகோல். அந்தத் தன்மை யாழ்நகரிலில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ மார்கழி மூ ௩௦ உ செவ்வாய்க்கிழமை

### புன்மை இருட்கணம் போகப்

## பொலிக பொங்கல்!

ஓர் புத்தாண்டு தோற்றி னுலென்னப் பொலிவு தாகும் புனிதவேளை நாளை புலருகின்றது. இவ்வாறே ஒவ்வோராண்டும் இயற்கை எழில் காட்சி அளிக்கின்றது. புதுமலர்ச்சியும் புத்துணர்ச்சியும் உண்டாவதும் ஒழிவதுமாக மாறி மாறி வருகின்றன. தைப் பொங்கலுமோ பொலிவதும் மெலிவதுமாய் நிகழ்ந்தவண்ணமுண்டு. எனவே இத் தன்மை முன்னோர் காட்டிய முறைநெறியாகுமவ்வளவோடமைவதா அன்றி மக்கள் உளத்தில் உண்மையான உணர்ச்சியை ஊட்டுவதா என்றாராய்வது பொருந்தும.

பகலும் இரவும்போன்று மன எழுச்சியும் உள்ளத் துறக்கமும் வருவது வழக்கமெனினும் உன்னுமவர்க்கு இறை உண்மையனுகின்றுணுகையால் என்றும ஒளி நிலவவேண்டுமென்று நாடுவதே நன்னெறியாகும்.

மங்கலமாய்ப் பிறக்கின்றது தைத்திங்கள்; மக்கள் மனத்தில் நன் மாற்றம் உண்டாவதுபோல உதிக்கின்றான் மகர ஞாயிறு; என்றெல்லாம் கற்பனை செய்துவிட்டுக் கனத்திறம் உரைத்தார் போல களிப்பெய்தி அவ்வளவில் வாளாவிருப்பது ஏட்டுச் சுரைக்காய்போன்றது. முன்னோர் செய்து வந்தார்களாகையால் இந் நாள் தொடரப் படுகின்றது என்றுலது மூற்றும்பொருந்தாததாகும்.

நல்ல காலம் வருமா?.... என்று பின்வருங் காரியமுரைப்பார் வாய்க் கேட்பவர்கள் அவ்வாறு நிகழ்வதற்கேதுவாகிய பணியை ஆற்றாது விட்டாற் சோதிடர் சொல்லியதை நம்பிப் பன்மடங்கு துக்கப்பட வேண்டியவராவர். 'தை' பிறந்ததும் உய்யும் வகை உணர்ந்து விட முடியும் என்ற எண்ணம் இருப்பதோடு உண்மை வழியில் நின்று உழைத்து வர வேண்டியது முறை. நெற் பயிரிட்டார் நற் பொலிவு காணவேண்டிப் பொங்கல் அமைப்பார்களேயாகில்.... அவர்கள் முன்னரேசெய்த பணி நன்கு முற்றுப்பெறுவதை வேண்டுகின்றவர்கள் அவர். எண்ணுவார்

### பட்டின சங்கத் தலைவர் தேரிவு

காங்கேசன்துறைப் பட்டின சங்கத்துக்கு திரு. S. கிருபாமூர்த்தியும், மானிப்பாய்ப் பட்டின சங்கத்துக்குத் திரு. பொ. சின்னத்துரையும் தலைவர்களாக எதிர்ப்பின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

நெஞ்சில் நண்ணுவான் இறைவன் என்ற உண்மையை நன்குணர்ந்தவர்களாவர்.

ஆகவே முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழியுண்மை யறிந்தவர்கள் பொங்கல் புனிதமாகவிருக்கும். அவ்வழிப் பொலிவாகப் பொருந்தும் மங்கலமுமுண்டாகும்.

எனவே பொங்கலுக்கும் ஒரு நோக்கம் வேண்டும். அவ்வெழுச்சி நல்லுணர்ச்சியின்பாற் றோன்றியதாக வேண்டும். பல்சுவை உண்டு உற்றார் உறவினருடன் உவகை பூண்டு நிற்றலைமட்டும் பொங்கல்குறிக்காது. இறைபணி நிற்றலை, அவ்வழி நின்று அன்புடைமையாதலை, அன்பாளராகி எங்கும் பிறர்க்குரியராகும் நிலையை, இவற்றையே பொங்கல் அறிவுறுத்தும்.

மங்கலமாயமைந்தபொங்கல் மக்கள்பால் மயக்கத்தை நீக்கும், மதியைக் கூரியதாக்கும், உள்ளத்தள் ஒளிநிலவச் செய்யும, நன்று செய்வதையே நாடச்செய்யும், அல்லாதனவற்றை அணுகா அறிவை உதிக்கச்செய்யும்.

உழுதுண் வாழ்பவர் தொழுதுஆற்றும் பொங்கலின் பயனாக நெல் பொலிக, நானிலத்து வறுமை ஒழிக. ஆனினம் சிறக்க. ஆலயங்களில் ஆறு காலமும் அரன்பணி நடக்க வளம்பெருக. கற்றவ் வழிநிற்கும் நல்லோர் பொங்கலின் பயனாக உண்மை அறிவு ஓங்கவும், உலகாயத மயக்கம் நீங்கவும் இறை அருள் புரிவாராக.

அரசியல் அமைச்சுடையாரும் அன்னவர் ஏவல் கொள்வாரும் பிழையியற்றாராக நடுநின்று நன்காராய்ந்து நல்லன செய்வாராக.

அறங்கூறவையத்தார் மறமகற்றப் பெரும் பணி புரிவாராக.

எவ்வுயிர்க்குஞ்செந்தண்மை பூண்டு ஒழுகுவாராக அந்தணர் குழாம்.

எல்லாம் இன்பமேயாகவும் எங்கணும் அறவொளி இலங்கிடவும், யாவரும் இறை பணி நிற்கவும் எம் பெருமான் திருவருள் பொலியப் பொங்கல் மங்கலம் எய்துவதாக.

# தீக்குளித்தலுக்குத் தெய்வ சம்மதம் தேவை இல்லையாம்!

## விளக்கம் வரைந்தவரின் விபரீதப் போக்கு!!

"கிறிஸ்தவ ஆண்டுமலர் 1953" எனப் பெயரிய இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சங்க வெளியீடொன்று என் கைக்குக் கிட்டியது. ... ... ... .... .... ... ....

பத்துத் துறைகளில் எழுதப்பட்ட அவ் வெளியீட்டில் தீக்குளித்தலின் இரகசியம் எதுவாகும்? என ஆராய வந்த கட்டுரையின் கீழ் மாத்திரம் அக் கட்டுரையின் எப்பகுதியாவது யாரும (?) எடுத்து வெளியிடக்கூடாது என்னும் கட்டுப்பாடொன்று காணக் கிடக்கின்றது! இத் 'திரை' அமைத்தது எதற்காகவோ? ... .... ... எதற்காகவாயினும் ஆகுக.

ஆனல் இது தரும் பொருளைமாத்திரம் ஒருவாறு சிந்தித்தல் இன்றியமையாதெனக் கருதுகிறேன். தீக் குளித்தலின் இரகசியத்தை ஆராய எழுந்த கட்டுரையில் தீக்குளித்தல் சர்வசாதாரணமானது, யாரும் செய்யத் தக்கது என்ற தீர்மானத்தை வலியுறச் செய்தற்கு ஜேர்மன் சுவாமியாரையும் இழுக்கின்றார் கட்டுரையின் ஆசிரியர். அஃதும் தாமாகவன்று. திரு. கெனத் சோமநாதர்—ஜேர்மன் சுவாமியாரைப் பிடிக்க— திரு. சோமநாதரைக் கட்டுரை ஆசிரியர் கனம் எறிக் றோபின்ஸன், பிடிக்கின்றார். எப்படித் தெரியுமா? அமைதியான மனமுடையவர் யாரும் தீக்குளித்தல் செய்யலாமென்றும அதற

"வண்ணை-வாசன்"

குக் கடவுளுடைய அருட்சக்தியென்பது தேவையில்லை என்றும் திரு. சோமநாதருக்கு ஜேர்மன்சுவாமி சொன்னாராம்! அக் கதையை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் தான் கண்டாராம். தான் கண்டதை வேத வாக்காகக் கொண்டாராம். ஆகவே, அதற்குக் கடவுட் சக்தி தேவையில்லையெனவுங் கொண்டாராம் ....?

அந்த வெளியீட்டிலேயே மற்றோர் கட்டுரையில் "சன்மார்க்க சீவியம் குறைந்து போகும் இக் காலத்திலே நமது விசுவாசத்தை நாளாந்த சீவியத்துடன் இணைத்துப் பார்ப்பதினுலேயே நாம மறுபடியும் விளிப்படைய முடியும" "இதற்குக் காரணம் மார்க்கமும் - வாழ்க்கையும் ஒன்றுயிருப்பதே. கடவுளுக்குச் சம்பந்தமற்ற எப்பகுதியாவது மனுஷ வாழ்க்கையிலே யில்லை" என்று கூறுகின்றார். இவரோ மதகுருமாரிலுள்ள கனவான். கடவுளுக்குச் சம்பந்தமற்ற எப்பகுதியாவது மனுஷ வாழ்க்கையிலே யில்லையென்றாரும இவர் தீக் குளித்தலில மாத்திரம் கடவுளுக்கு ஒரு சம்பந்தமுமில்லை யெனக் கின்றார்... இவைகளை ... வெளியிட்டிருக்கிறார்கள். .... .... ....
அருக்குச்சொலல் அழுவோமா?

இதை வெளிபிட்ட கிறிஸ்தவ தமிழ்ச் சகோதரர்களே! கிரியைகளைச் செய்பவர் சிலரின் நிலைமையைக்கொண்டு சைவக

கிரியையின் தன்மை இது வென நீங்கள் நிச்சயிக்க நினைத்தல் முடவன் கொம்புத் தேனைப் பெற முயல்வதையொக்கும்!! இத்தகைய அடாதசெயல் களை விடாது செய்ய நீங்கள் நினைப்பதால் வரும் விளைவு ஒன்றே ஒன்று. வெள்ளையர் ஆட்சிப்பந்தம் ஒருவாறு நீங்கியபோதிலும் சிலைவறியாது அதிகார வெறி கொண்டு ஆட்சிபுரிந்து இறை என ஒன்று இன்று என்று என்றும் கூறுவாரின் கீழ் ஒற்றுமை இன்றி என்றும் அடிமைத் தளை பூண்டு வாழ்வதேயாகும்! இதுதான் உங்கள் குறிக்கோளா? .... ...

# பொலிவைக் குறிக்கும் புனிதப் பொங்கல்!

தைப் பொங்கல் விழாச் சிறப்புக்கள் பலப்பலவாக அறியக்கிடக்கின்றன. அவற்றுள் ஒன்று இங்கே காணக்கிடக்கின்றது:

"வேயுறுதோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கைமுடி மேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே".

இவ்வுலகு இனிது நிலைத்து உயிர்வாழ்க்கைக்கு இடந்தருதற்கும், இவ்வுலகின்கண் உயிர்கள் வாழுதற்கும், இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு வேண்டும் உணவுப்பொருள்கள்முதலியன உண்டாவதற்கும், உயிர்வாழ்க்கைக்கு வேண்டும ஒளியைப் பெறுதற்கும் சூரியனே மூல காரணமாயிருக்கின்றது. இவ்வுண்மை இக்கால விஞ்ஞான சாத்திரங்களுக்கும் பண்டைக் காலத் தத்துவ சாத்திரங்களுக்கும் ஒப்ப முடிந்ததாகும். மக்கள் அனுபவத்திலும் இவற்றின் சில உண்மைகளைக் காணலாம்.

### செந்தமிழ்நாட்டுத் தெய்வ மரபு

இம் மண்ணுலகும், ஏனையவும் இம் மண்ணுலகில் வாழும் உயிர்களும் தத்தம் இடங்களில நிலைபெற்று வாழுதற்கு ஆதாரமாயிருப்பது சூரியனது ஆகர்ஷண சக்தியாகும். வானம் வழங்குதற்கும் அதனல் உயிர்களுக்கு வேண்டும் உணவுப் பொருள்கள் உண்டாவதற்கும் சூரிய கிரணங்களே காரணமாயிருக்கின்றன. அன்றியும பகலும கட்பார்வைக்கு ஆதாரமாகச் சூரிய ஒளியே அமைகின்றது.

இத்தகைய சூரியன் இச்சீரிய தொண்டைச் செய்யும ஆற்றலை எவ்வாறு பெறுகின்றது என்று ஆராயப் புகுவோமாயின் மக்கள் வாழ்க்கையின் இரகசியங்களை அறிந்தவராவோம. சோம, சூரிய, அக்கினிகள் சிவபரம் பொருளின மூன்று திருக்கண்களாயமைந்திருக்கின்றன எனனும் சைவநூல வழக்கு இவ்விரகசியங்களையறிதற்குத் திறவுகோலாயமைகின்றது. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யுலகு" (குறள) "அகர வுயிர்போ லறிவாகி யெங்கும் நிகரி லிறை நிற்கு நிறைந்து" (திருவருட்பயன்) என்னும் குறட்பாக்கள் தரும் பொருளை உற்று நோக்குமிடத்து, அகில உலகங்களும் சிவபரம பொருளின் திருமேனியாயமைகின்றன என்பது ஒருபுடை அறியவருகின்றது. அப் பரமபொருளே இவ்வுலகெங்கும் அறிவொளியாய் விளங்குகின்றதென்பது மற்றொருபாலறிய வருகின்றது. இது உத்தராயணத்திலிருந்து சூரியன் தட்சிணாயணத்துக்குச் செல்லத் தொடங்கும் நாளில் நிகழ்கின்றது. இந் நாள் தொடக்கம் இருள் குறைந்து ஒளி கூடுதல் இங்கே கவனிக்கத் தக்கது. இவ்வுண்மையை அறிந்து வாழ்க்கையைச் செவ்வனே நடத்துதற்கு வழிகாட்டியாய்த் தைப்பொங்கல் விழா, தமிழ் நாட்டிலேயமைதல் காண்க.

தமிழ் நாட்டு உணவுப் பொருள்களுள்ளே நெல்லரிசியும பசுப்பாலும் சிறந்த பொருள்களாயமைந்திருக்கின்றன. இவற்றைக்கொண்டு திருவமுது பொங்கிச் சிவசூரியப் பெருமானுக்கு நிவேதனம செய்து தைப்பொங்கல்நாளிலேவழிபாடாற்றுகின்றோம். இவ்வழிபாடு சரியை, கிரியை, யோகம ஞானம ஆகிய நான்கு சைவ சாதனங்களையும அறிவற்றவர்க்குத் தக்கவாறு அறிந்தும அறியாமலும் சாதிக்க இடந்தருகின்றது. பொங்கற் பொருளை தேடித் தக்கவாறமைத்தலிற் சரியையும், அவற்றைக் கொண்டு பொங்கித் திருவமுது படைத்து வழிபடுவதிற் கிரியையும், வழிபடும்பொழுது உலகங்களடங்கிச் சிவபரம் பொருளுடன் ஐக்கியப்படுதலில யோகமும், சிவபரம் பொருளே சூரிய கிரணங்கள் கருவி

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல்

## எல்லா அறத்துக்கும் நல்லாதாரம் இதுவே!

அறம், இல்லறம், துறவறம் என இருவகைப்படும். இவ்விரண்டில் சிறந்தது இல்லறமே "இல்லறமல்லது நல்லறமன்று" என்றார் ஔவைப் பிராட்டியார். "அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை" என்றார் திருவள்ளுவர் ஒருவற்கு இல்லறமாகிய நல்லறம் வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியின் தொடர்பால் தொடங்குகிறது. மக்கட் பேறால் அன்பு வளருகிறது. அன்பின பெருக்கால் அருள் உருவாகிறது. அருள் உருவால் தொடர்புடையாரிடத்தும், தொடர்பில்லாரிடத்தும் அன்பு நிலைக்கிறது இவ்வாறு நிலைத்த அன்பு விருந்தினரைப் பேணுவதாலும் அவர்களுக்கு உதவி செய்வதாலும் வெளிப்படுகிறது. விருந்தினரைப் போற்று வழி இல்வாழ்க்கையால் ஆய பயன் யாதொன்றுமில்லை என்பது

இருந்து ஓம்பி இல்வாழ்வது
எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தற்
பொருட்டு

என்ற திருக்குறளால் தெளிவாகத் தெரிகிறது.

விருந்து என்பது நமக்கு அறிமுகமில்லாது புதிதாய் வந்தவரைக் குறிக்கும். உதவி நாடிவரும் விருந்தினர் இரு வகைப்படுவர். ஒன்று நெடு நாட்களுக்கு முன் பழக்கமான காரணத்தால் வருபவர்; மற்றொன்று முன் பழக்கம் சிறிதும் இல்லாது வருபவர். விருந்தோம்பல் என்பது வந்த விருந்தினரை உபசரித்தலும், அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து உதவுதலுமாம்.

மனைவி சிறந்த அன்பும் பண்பும் வாய்க்கப்பெற்றவளாயிருந்தாலன்றி விருந்தோம்பலாகிய சிறந்த அறம் செம்மையாக நடைபெறாது. எவ்வளவு பெருஞ் செல்வம் இருந்தாலும் மனைவி நாணமில்லாதவளாயின் விருந்தினரை மகிழ்வித்தல் ஒரு சிறிதும் இயலாது: மிகக் கொடிய வறுமைக் காலத்து எவ்வளவு பெரிய விருந்தினர் வந்தாலும், மனைவி குணமுடையவளாயின் விருந்தோம்பல் மிகச் சிறப்பாக நடைபெறும். விருந்தோம்பற்குக் குணமிக வேண்டுமேயன்றிப் பணம் மிக வேண்டுவதில்லை. தமது பொருள் அளவிற்கு ஏற்ப மலர்ந்த முகமும், இனிய சொல்லும் உள்ளன்புங் கொண்டு இயன்ற மட்டும் உண்டி முதலியன கொடுத்து வந்த விருந்தினரை மகிழ்விக்கலாம. விருந்தினரைப் போற்றுவதற்கு வேண்டப்படுவது அன்பும் இன் சொல்லுமே யாகும். அதுபற்றியே திருவள்ளுவரும் விருந்தோம்பல் என்ற தலைப்புக்கு முன்னும் பின்னுமாக அன்புடைமை, இனியவை கூறல் என்ற தலைப்புக்களை அமைத்து வைத்தார். வறுமையினால் அல்லற்பட்ட காலத்தும் மனந்தளராது உள்ளதைக் கொண்டு வல்லதைச் செய்து, வந்த விருந்தினரை மகிழ்வித்த அடியார் வரலாறு ஒன்று இரண்டு குறித்தற்பாலது.

இளையான் குடியில் மாறனாயனாரும் அவரது வாழ்க்கைத்துணைவியாரும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இருவரும் ஒத்த அன்போடும் பண்போடும் விருந்தோம்பி வந்தனர். நாளடைவில் அவர்கள் செல்வம் நீங்கி வறுமையுற்றனர். ஒரு நாள் இருவரும் தங்களுக்கு உணவின்றித் தளர்வுற்றிருந்தனர். அன்று நள்ளிரவில் பெய்து கொண்டிருந்த மழையில் நனைந்த உடலுடன் ஒரு சிவனடியார் விருந்தினராக வந்தார். தங்களுக்கு உணவில்லை என்பதையும், பணம் இல்லை என்பதையும்

.... "குருகுலம்" ....

கடன் தருவார் யாருமில்லை என்பதையும மழை இருள் என்பதையும், அவர்கள் கருதவில்லை. பசித்து வந்தவரை உண்பிக்கவேண்டுமென்ற உள்ளன்போடு நினைத்தனர். முற்பகலில் அவர்கள் வயலில் விதைத்திட்ட நெல் முளை அரிசியாயிற்று, மனைக் கூரை விறகாயிற்று, புறக்கடையில் பறித்த முளைக் கீரை வேறு வேறு கறியமுதாயிற்று. மனையவரின் கைத் திறத்தால் சமைத்த கீரையும் சோறும் வந்த அடியார்க்கு அமிழ்தினும் இனிய அமுதாய் அமைந்தன. எனவே, விருந்தோம்பல் என்ற சிறந்த மனையறத்திற்கு வறுமை ஒருக்காலும் தடையாயிருக்காது.

கண்ணகியின் காற்சிலம்பை விற்பதற்காகக் கோவலன் கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரைக்குச் சென்றான். அப்பொழுது, தான் மாதவியின் கட்பால் கண்ணகியைப் பிரிந்திருந்த காலத்தில் அவளுக்கு இழைத்த தீமையைக் கூறி வருந்தினான். அதைக் கேட்ட கண்ணகி தான் அதற்காக வருந்தவில்லை என்றும் கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில் சில நல்லறங்களைச் செய்ய இயலாது போனமைக்குத்தான் வருந்துவதாகவும் கூறினாள். இவ்வாறு கூறியதை இளங்கோவடிகள் அறவோர்க்கு அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின விருந்து எதிர் கோடலும் இழந்த என்னை என்னும் அடிகளில் எடுத்துக் காட்டுகின்றார். இதனால், கணவனுக்கும், மனைவிக்கும் இடையே அன்பு இல்லாது போமாயின், இல்லறம் இனிது நடைபெறாது என்பதும் விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று மகிழ்வித்தலே இல்வாழ்க்கையில் சிறந்த குறிக்கோளாகும் என்பதும் தெளிவாகிறது.

## பாராட்டுக்குரிய பெருந்தன்மை

வலிகாமம் மேற்குப் போக்குவரத்துச் சங்கத்தாரின் C. E 3568-ம் இலக்க மோட்டார் இரதத்திற் பயணஞ் செய்த திரு. வை. சண்முகநாதன் அவர்கள் போக்குவரத்துச் சீட்டைப் பெறும்பொழுது தமது பணப் பையை நழுவவிட்டு விட்டார். பிரயாண முடிவிற் பணப்பையைக் காணாது அலைப்புண்டு திரு. சண்முகநாதன் இதனைச் சங்கக் காரியாலயத்திற் அறிவித்தபொழுது அங்கே அந்தப் பணப்பையை அந்த இரதப் பிரயாணவசதி செய்பவர் திரு. சுப்பிரமணியம் அவர்களால் ஒப்புவிக்கப்பட்டதென்று அறியவந்தார். உடனே பணப்பையும் கைக்கெட்டியது.

அப்பையில் ரூபா 50 இருந்ததாகவும் அப்பணம் அப்படியே கிடைத்ததாகவும் திரு. சண்முகநாதனவர்கள வலிகாமம் மேற்குப் போக்குவரத்துச் சங்கத்தாரையும் பிரயாண வசதியாளர் திரு சுப்பிரமணியத்தையும, சாரதி திரு தம்பிராசாவையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றார்.

## பேர் மாற்றம்

இப்பொழுது மன்னரி லுவ்லன தியேட்டர் (படக் காட்சிச் சாலை) இல் கடமை பார்க்கும், சாவகச்சேரி சின்னப்பு அல்பிறெட் ஆகிய நான், இவ்வளவு காலமும் சின்னப்பு திருஞானம் என வழங்கிவந்த என் பெயரை இன்று தொடக்கம் எஸ் திருஞானம் என மாற்றிக்கொள்ளுகிறேன் எனறும், எவ்வகையான சாதனங்களிலும் எஸ். திருஞானம் எனக் கைச்சாத்திடுவேனென்றும் நகரினர் ஊரவர்களாகிய எல்லாருக்கும் இதனால் தெரிவிக்கின்றேன்

எஸ். அல்பிறெட்

சாவகச்சேரி
1—1—53.

M, 218 13—1—53.


வண்ணை தையல்நாயகி கலிவெண்பா திருவூஞ்சல்
முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல்

சைவப்பிரகாச யந்திரசாலையில் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை சதம் 25


திருஞானசம்பந்த சுவாமிகள் திருமயிலையில் எழுந்தருளி எலும்பைப் பெண்ணுருவாக்கிய தேவாரத் திருப்பதிகத்தில்

"மட்டிட்ட புன்னையங்
கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான்
கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின்
உருத்திரபல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே
போதியோ பூம்பாவாய்"

என்று அருளிச் செய்திருப்பதாலும், விருந்தோம்பலே இல்வாழ்க்கைக்குரிய குணஞ்செயல்களில் மிகச் சிறந்தது என்பது தெளிவாகிறது.

## நீர்வேலி கிராமச் சங்க வேலைகளின் ஒப்பந்த அறிவித்தல்

பின்னும் காணப்படும் கிராம வேலைகள் ஒப்பந்தமாகக் கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன:-

கிராமச்சங்கக் கந்தோரில் ரூபா 10 கட்டி எடுக்கும் மாதிரிப் பத்திரங்களிலேயே மனுச்செய்யவேண்டும். அப்பத்திரங்கள் 1953-ம் ஆ தைமீ 15-ம் வியாழக்கிழமை பகல் 2 மணிக்கு முன் ஷை சங்கக் கந்தோரில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கடதாசிக் கூட்டில் அடைக்கப்பட்டுக் கூட்டின் இடது மேற்பக்கத்தில் மனுப் பத்திரம் என்று எழுதி நீர்வேலிக் கிராமச்சங்கத் தலைவர் உரும்பராய் என விலாசமிட்டு 1953-ம் ஆ தைமீ 16-ம் வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு முன் ஷை உரும்பராய்ச் சங்கக் கந்தோரில் கிடைக்கும்படி அனுப்புக.

தெரிந்தெடுத்த கேள்விக்காரன் ஷை சங்கத் தலைவருடன் ஒரு கிழமைக்குள் பொருத்தம் எழுதிக் கொள்ள வேண்டும். மனுப்பத்திரங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ சங்கத்துக்கு அதிகாரமுண்டு

வேலைகளின் விபரம்

உரும்பராய் ஞானவயிரவர் கோவிலடி ஒழுங்கையை றோட்டாகத் திருத்துவதற்கு ஒப்பந்தப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

T. Thambiah,
கிராமச்சங்கத் தலைவர்,
உரும்பராய்

1953-ம் ஆ தைமீ 8உ.
M. 217 13—1—53.

## பொலிவைக் குறிக்கும் புனிதப் பொங்கல்!

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

யாவையும உயிர் வாழ்க்கைக்கு வேண்டும் உணவுப் பொருள்களை உதவியும், உயிர் வாழ்க்கையிற் கட்பார்வைக் குதவியாய் நின்றும், அண்டத்திலும் பிண்டத்திலும் அறிவுருவாய் விளங்கியும் இன்னபிறவாறுகள் எல்லாவற்றிலும் முழுமுதலாயமைந்து ஆன்மாக்களுக்குத் திருவருள் சுரக்கின்றது என்பதை அறியத்தருதலில் ஞானமும பெற வருகின்றன. என்னே எம் முதாதையர் அறிவுப் பெருமை, இத்தகைய சிறந்த பொங்கல் விழாவைச் சைவ மக்கள் ஒவ்வொருவரும் இயன்ற வரையிற் சிறக்கச் செய்து இயைந்த இயைந்தவாறு இறைவன் திருவருளைப்பெற்று இன்புற்று வாழுவோமாக.

உ

## வண்ணை வைத்தியேசுவரர் மகத்துவம்

வண்ணை வாழ் மகைசுவர்ய மகேளதா ரியப்பிரபு
வைத்யலிங் கச்செட்டி முன்
வைத்தியே சுரர்தைய லுயகியை விதியுளி
வழாது பிர திட்டை செய்தான்
கண்ணிவ் வியாழ்ப்பாண புருடற் கிரண்டோன்று
கழறுறு முக நாவலன்
சர்சிவரை சத்திரங் கண்டகோ வொன்றிவ்விரு
கண்களிற் கண்டன்பெனும்
பெண்ணைப் புணர்ந்தின்ப வாரிதோய்ந் தருளேனும்
பிள்ளையைப் பெற்றில்லறப்
பேற்றிற் சுவர்க்கபூதல் விற்பிருந்துந் துறவு
பேணி முத் தியையும் பெறும்
தண்ணறுங் கழுநீர்த் தடாக தீர்த் தத்தாடு
சாந்தநா யகி சமேத
சந்த்ர மௌலீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே,

* * * *

துநறுங் கொன்றையந் தொடையலான் வண்ணையிற்
கோயில்கொண் டருளி யினபக்
துயிலொடங் கமர்தலாற் றையலு யகியம்மை
கோதில் திரு வருள் குடைதலாற்
பொருவரும் வண்ணை நன் னக ராகியின்பம்
புதுக் குடிகண் மல்கிப்
பொன்னக ரெனப் பொலிந் தக்கிரா காரமும்
பூசுரர் திருக் கூட்டமும்
திருமருவு சைவசத் திரமொடு மடங்களுஞ்
செய்யகடை வீதி பிறவுந்
திகழ்ந்திவ் வியாழ்ப்பாண சிகரத் திலங்கிடுந்
திவ் யமது டத்தி ஞேங்கும்
தருவளர் தருந்தனித திருவளர் திடற் கண்வாழ்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ராபுர தலவாசனே.

—ஈழமண்டல சதகம்.


திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான ருணிமார்க் ஓடுகள் 13¾, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம்.
Std. 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

# விநாயக விரதத்துக்குரிய 'மிக்க மதி' எது?

பிள்ளையார் நோன்பு என்னும் விநாயக சஷ்டி விரதம் அனுட்டித்தற்கு 'மிக்க மதி எது' என்பது பற்றி அனேக ஆதாரங்களை ஆராய்ந்தேன்.

'வடிவுறு மதியம் விண்ணில்
வளர்ந்தெழு மாறும்பக்கத்
துடனுறு சதய நாள்வந்தொன்றிய
காலை வேழப்
பிடிநடை யுமையாள் பெற்ற
பிள்ளையார் பிறந்த நாளென்று
அடைவுறு நாளை நான்கி
லற்றை நாள திகமென்றே."

என்ற பிள்ளையார் புராணச் செய்யுளால், பிள்ளையார் நோன்பு இருபத்தொரு நாட்களைக் கொண்டதென்பதும், அதில் வளர் சஷ்டியும் சதய நாளுங் கூடிடுந் தினமே அந்நோன்பு பூர்த்திக்குரிய அதி முக்கிய தினம் என்பதும் நன்கு தெளிவாயின. ஆனல் மாதம் வெளியாகவில்லை. ஆயினும் வளர் சஷ்டியுஞ் சதய நாளும் கூடிடுந் தினத்தைத் தன்னுட்கொண்ட மாதமே விநாயக சஷ்டி விரதம் நோற்கமிக்க மதியாகும் எனவே பெறப்படுகின்றன.

மேலும் "இறை நாளெனு மார்கழிச் சட்டியின்" என்ற விநாயக புராணத்தானும், 'விண்ணுமம் புகலின்ற மிக்கமதி தனிலாரும் பக்ஷமாகு, மிந்நாளில்' என்ற கந்த புராணத்தானும் மார்கழி என்ற மாதமும் வெளியாகின. இம்மாதத்திற்குச் சௌரமான ரீதியாய் மார்கழி என்ற பெயரும், சாந்திரமான ரீதியாய் மார்கசீர்ஷம் என்ற பெயரும் தொன்றுதொட்டே இருந்து வருகின்றன. மார்கசீர்ஷம் என்ற கியதிப்படி பிள்ளையார் நோன்பு சில வருடங்களில் சாந்திரமான மார்கசீர்ஷத்தைத் தன்னுட்கொண்ட சௌரமானமாகிய கார்த்திகை மாதத்திலும் முடிவடைவதுண்டு என்பது முன் கூறியுள்ள ஆதாரங்களாலும், பின்வருமவைகளாலும் தெளிவாம்.

திருக்கார்த்திகைத் தீபோற்சவம் கார்த்திகை விரதம் உமாமகேசுர விரதம் ஆதிய முடிவெய்தத் தொடர்பாய்ப் பிள்ளையார் நோன்பு ஆரம்பங்கொண்டு, அது முதல் இருபத்தொன்றாம் நாளில் வருப வளர் சஷ்டி - சதய நாள் தன்னில் விநாயக சஷ்டி விரத பூர்த்தி பெற்று. அதன் தொடர்பாய்த் திருவெம்பாவை பூஜாரம்பங்கொண்டு, அது முதல் பத்தாம் நாளில் வரும் மார்கழித் திருவாதிரைத் தினத்தில் ஆருத்திரா தரிசனம்பெற்று வரும் வழக்கம் தொன்று தொட்ட பழக்கமே எனப் பல பெரியார் கூறுகின்றனர்.

ஆகவே கார்த்திகை மாதப் பவுணைதொட்டு மார்கழிமாதப் பவுணையீறாகவுள்ள காலத்துள் உமா மகேசுர விரதம் - திருக்கார்த்திகைத் தீபம் - திருக்கார்த்திகை விரதம் - பிள்ளையார் நோன்பு - திருவாதிரை ஆருத்திராதரிசனம் ஆதிய விரத விழாக்கள் நடைபெறும் என்பது புலனாகின்றன.

29 9-1931 சிவநேசன் இதழில் "விநாயக சதுர்த்தி, மகாளயபக்ஷம், நவராத்திரி ஆதிய வொன்றின்பின் ஒன்றாக வருகிற முறைபோல, திருக்கார்த்திகை, பிள்ளையார் நோன்பு, திருவாதிரை யாதிய முறையே யொன்றின் பின் ஒன்றாக அனுட்டித்து வருதல் தொன்றுதொட்ட வழக்கமாக இருக்கிறது இம்முறைகளைத் தழுவும் பொழுது சில ஆண்டுகளில் பிள்ளையார் நோன்பு என்னும் விநாயகசஷ்டி கார்த்திகை மாதத்திலும் நேர்ந்திருக்கிறது." என்று தெளிவாய் விளக்கப்பெற்றிருக்கிறது.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருமானருளிய சைவவினாவிடை இரண்டாம் புத்தகத்தில விநாயக விரதம் கூறுமிடத்தில். விநாயக சட்டி விரதமாவது யாது? என்ற வினாவின் விடையாய் "கார்த்திகை மாசத்துக் கிருஷ்ண பக்ஷப் பிரதமை முதல் மார்கழி மாசத்துச் சுக்கில பக்ஷ சட்டியீறாகிய இருபத்தொரு நாளும் விநாயகக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாம்." என விளக்கியிருக்கிறார்கள். இதனையே விநாயக மஞ்சரியிலும் காணப் பெறுகின்றது, இதுவும் மேற்கண்ட விளக்கங்களுக்குப் பொருத்தமாகவே விளங்குகின்றது.

இன்னும், 23-12-52 இந்துசாதனத்தில் "விநாயக சட்டி விரதம் நிறைவெய்தத் திருவெம்பாவை விரதம்." எனக் காரணார்த்தமாகக் குறிக்கப் பெற்றிருப்பதினாலும் பிள்ளையார் நோன்பு நோக்கு மிக்க மதி எளிதில் புலனாகின்றது.

இன்னன பலவுங்கொண்டு ஆராயுமிடத்தில், கார்த்திகை மாதத் தலைப்பில் பவுரணையும், நடுவின் மேல் அமாவாசையும் வரும் வருஷங்களில் பிள்ளையார் நோன்பு சாந்திரமான ரீதியாம். மார்கசீர்ஷத்தைத் தன்னுட்கொண்ட கார்த்திகை மாதத்திலும், கார்த்திகை மாதத் தலைப்பில் அமாவாசையும், நடுவின்மேல் பவுரணையும் வரும் வருஷங்களில் பிள்ளையார் நோன்பு சௌரமான ரீதியாம் மார்கழி மாதத்திலும் முடிவடைவது முறைதான் எனவே பெறவேண்டியது.

ஆதலால் வரவிருக்கும் 1953 விஷய, 1956 துன்முகி ஆதிய வருஷங்களிலும், இதுபோன்றே வரும் வருஷங்களிலும் பிள்ளையார் நோன்பு என்னும் விநாயக சஷ்டி விரதாரம்பமும் — விரத பூர்த்தியும் பெறத்தக்க மிக்கமதி சௌரமானக் கார்த்திகை மாதமே என்பது தெளிவாயின.

"திருவுங் கல்வியுஞ்
சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந்
தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்க
பெருகு மாழத்தப் [வம்
பிள்ளையைப் பேணுவாம்."

விரதாபிமானி
சிவசூரியநாராயணன்
பஞ்சாங்க கணிதர்
இட்டமொழி
திருநெல்வேலி
தென்னிந்தியா.

# செந்தமிழைச் செந்தமிழாகச் செய்திடல் வேண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோக சஞ்சீவினி" என்று பெயரிட்டு விற்றால், மக்களின் மனம் அம் மருந்தையே நாடும். இதைப் போலவே சொற்களைப் பயன்படுத்தும் முறையிலும் மக்கள் மனம் செல்லுகின்றது. இதைப்பற்றி ஒரு நாள் என் நண்பரொருவரிடம் பேசியபோது, "கஷ்டம் என்ற சொல்லை நீக்குவதென்பது கஷ்டம்தான் சார்" என்று கூறினர். அவர் கூறிய வாக்கியத்திலும் இரண்டாவதாகக் கூறிய கஷ்டம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், முடியாது, அல்லது அரிது என்ற சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாம். இவ்வாறாகக் கஷ்டம் என்ற ஒரு சொல்லானது துன்பம், இன்னல், இடும்பை, இடுக்கண், புன்கண் வருத்தம், அரிது போன்ற சொற்களினிடங்களில் பயன்படுவதைக் காண்கிறோம். இடும்பை, இடுக்கண், புன்கண் எனும் சொற்கள் பேச்சு வழக்கின்றி இலக்கிய வழக்கிலேயும், துன்பம், இன்னல், அரிதுபோன்ற சொற்கள் ஓரளவு பேச்சு வழக்கிலேயும் காணப்படுகின்றன. இப்போதுள்ள நிலையே நீடிக்குமானல் மேற்குறித்த சொற்களும் பேச்சு வழக்கினை யிழந்துவிடும், எங்கும் கஷ்டமாகவே காட்சி அளிக்கும்.

அடுத்தது 'விஷயம்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். 'விஷயம் கஷ்டத்தை' விட ஒருபடி மேலேறி நிற்கக்காணுகிறோம். இச்சொல்லே, படித்தோரிடையேயும் நீக்க வொண்ணாத நிலையை எய்தியுள்ளது. இச்சொல் யாங்ஙனம் வழங்கப்படுகிறதென்பதைக் காண்போம். என்ன காரியமாய் வந்தீர்கள், அல்லது எதன் பொருட்டு வந்தீர்! என்னுமிடத்தில் என்னவிஷயமாய வந்தீர்கள், என்றும், கூட்டத்தில்நான் எதைப் பற்றி அல்லது எப் பொருளைப் பற்றிப் பேசவேண்டும், என்று கேட்க வேண்டிய இடத்தில் நான் என்ன விஷயமாய்ப் பேச வேண்டும், என்றும், எல்லாவற்றையும் அல்லது எல்லா செய்திகளையும் அறிந்தவர்போல் பேசுகிறீரே! என்று கூறவேண்டிய இடத்தில், எல்லா விஷயமும் தெரிந்தவர்போல் பேசுகின்றீரே யென்றும், பள்ளியின் அலுவலாகச் சென்றேன் என்னுமிடத்து; பள்ளிக்கூட விஷயமாய்ச் சென்றேன், என்றும்; இக்காரியத்தில் அல்லது இச்செயலில் தலையிடவேண்டாம் என்று கூறுமிடத்தல், இவ்விஷயத்தில் தலையிடவேண்டாம் என்றும்; பலவிடங்களிலும் பேசப்பட்டு வருகிறது.

எனவே, காரியம்; அலுவல், செய்தி, செயல், பொருள், ஆகிய இடங்களிலும தேவையற்ற சில இடங்களிலும் விஷயம் எனும் சொல் பெரிதும் வழக்கிலிருந்து வருகிறது.

மூன்றாவதாக, அவசியம் என்ற சொல்லைக் காண்போம். மக்கட்குக் கல்வி மிக மிக இன்றியமையாதது; திருமணத்திற்கு நீங்கள் கண்டிப்பாய் வரவேண்டும், 'நீங்கள் எல்லோரும் வரவேண்டு மென்ற தேவையில்லை' என்று கூறவேண்டிய இடங்களில், முறையே, மக்கட்குக் கல்வி மிக மிக அவசியம், திருமணத்திற்கு நீங்கள் அவசியம் வரவேண்டும். நீங்கள் எல்லோரும் வரவேண்டும என்ற அவசியமில்லை, எனும்வாக்கியங்களைப் பயன்படுத்துகிறோம். எனவே அவசியம் என்ற சொல், இன்றியமையாமை, கண்டிப்பு, தேவை என்ற சொற்களின் இடங்களைப்பற்றிக்கொண்டது,

இவை போன்ற பல சொற்கள் தமிழ்பேசும் தமிழ்மக்களால் பேசப்படுகின்றன. (கஷ்டம், விஷயம், அவசியம் என்ற சொற்களின்றிப் பேச முடியாத நிலையில தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்பதைக் கூர்ந்து கவனிப்போர் அறிவர்,) இச்சொற்களை நீக்கி அவ்விடத்தில உயிர் நீங்கும் நிலையிலுள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும். இப்படிச் செய்தால் பல சொற்கள் பிழைக்கும். இயலும? இயலாதென்பதே பலருடைய விடையாயிருக்கும். அப்படி நினைப்போர், வணக்கம், நன்றி, பல்கலைக்கழகம், போன்ற சொற்கள வழக்குப்பெற்ற வகையைப் பார்க்க வேண்டும். இதற்கு வேண்டியது முயற்சியே. இம் முயற்சி பலர்க்கும் வேண்டும. ஆனல் சிறப்பாகப் பெற்ரோர், ஆசிரியர், ... அவர்களும் ... வேண்டும்.

—கலைக்கதிர்.


## மூலவியாதி அறவே அகற்றப்பட வேண்டுமானல்

பழனி, சி. எம். சாமி,

### நாகபஸ்பம் | கருணைலேகியம்

... உபயோகியுங்கள் ...

- நாட்பட்டதானலும ஆப்ரேசனின்றிக் குணப்படுத்த இயலும்.
- மூலச்சூடு, மூல முளை, இரத்த மூலம், மல பந்தம், ஆசனத்துவாரத்தைச்சுற்றிலும் கொப்பளமூண்டாகுதல் முதலியன குணமாகின்றது.

| 24 வேளை டஸ்பம் புட்டி 1க்கு ரூ 5-0-0 | கருணைலேகியம் அரைசேர் புட்டி ரூ. 2-8-0 |
|---|---|

ஏஜண்டு: S. பொன்னுச்சாமி பிள்ளை,
133 தப்பகொடா தெரு, பலாங்கொடை,

* * * (7)

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நம்பிக்கையும் திருப்தியும் தரத்தக்க ... 

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
= 0 =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. January 13 1953.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org